**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 155 /2018

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :தீர்த்தகிரி |
| Father's Name/Husband Name | :தீப்பாஞ்சி |
| Village | :தாளநத்தம் |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW6 |
| Religion | : Hindu |
| Age | :50 |

**Solemnly affirmed in accordance wit7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை.**

நான் தற்போது தாளநத்ததில் வசித்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன்.

கடந்த 2018 வருடம் அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் இடையில் அரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தன் அடிப்படையில் திருமணம் நடைபெற்றது அதன்பின்னிட்டு அ.சா.1 1 வது எதிரி கூறியதன் பேரில் அவரவர் வீட்டில் பிரிந்து இருந்தாரகள். சில தினங்கள் கழித்து 1வது எதிரி 2வது திருமணம் செய்து கொள்வதாக கிடைத்த தகவலின் பேரில் அ.சா.1 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றார். எதிரிகள் அ.சா.1 ஐ அடித்து வீட்டிற்கு வெளியில் ரோட்டில் தள்ளிவிட்டார்கள்.

பின்னர் கடத்துர் காவல் நிலைய போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள் அந்த மகஜரில் நானும் அரவிந்தன் என்பரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம்.

இன்ற என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது . வழக்கு தொடர்ந்த போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும்.

வழக்கு சம்பவம் தொடர்பாக சம்பவம் நடைபெற்ற அன்றே என்னை விசாரணை செய்தார்கள்.

நான் தற்சமயம் கூறிய சாட்சியத்தைதான் போலிஸ் விசாரணையிலும் கூறினேன்.

போலிசார் என்னை எதிரி 1 வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி**

**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 155 /2018

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :சாவித்திரி |
| Father's Name/Husband Name | :சீனிவாசன் |
| Village | :தாளநத்தம் |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW5 |
| Religion | : Hindu |
| Age | :39 |

**Solemnly affirmed in accordance wit7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை.**

நான் தற்போது தாளநத்ததில் வசித்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா மகள் ஆவார். எதிரிகளை தெரியும்.

அ.சா.1ம் 1 வது எதிரியும் காதலித்தார்கள். 1வது எதிரி அ.சா.1 வுடன் கிருஷ்ணகிரி டேம், வாணியாறு டேம் ஆகிய இடங்களில் ஒன்றாக சேர்ந்து சுத்துவார்கள். பின்னர் 1 வது எதிரி அ.சா.1 ஐ திருமணம் செய்து கொள்வதாக சொல்லிவிட்டு திருமணம் செய்து கொள்ளாமல் அழைகழித்தார். அதன் பின்னர் அ.சா.1 அரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1 வது எதிரி மீது புகார் கொடுத்தார். பின்னர் எதிரிகள் அ.சா.1யிடம் எதிரிகளிடமும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் அதன் பின்னிட்டு 1 வது எதிரி அ.சா.1 ஐ திருமணம் செய்து கொண்டார். மூன்று மாதங்கள் அ.சா.1 ஐ அவரது தாயார் வீட்டில் இருக்கும்படி கூறிவிட்டு அதன்பின்னர் அழைத்து செல்வதாக உத்ரவாதம் அளித்தார்கள்.

ஆனால் 1 வது எதிரி அ.சா.1 யிடம் சொன்னவாறு அழைத்து செல்லவில்லை.

1வது எதிரிக்கு 2 வது திருமணம் செய்து வைப்பதாக கேள்விபட்டு அ.சா.1– 1 வது எதிரியின் வீட்டிற்கு சென்றார். அப்போது 1வது எதிரி அ.சா.1 ஐ அடித்து வெளியே தள்ளிவிட்டார். மேலும் 1 வது எதிரியின் தாயாரான பத்மா, காஞ்சனா மற்றும் ரஜேந்திரன் ஆகியோர் அ.சா.1 ஐ அடித்தார்கள் தகராறு ஏற்படும் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது எதிரிகள் அ.சா.1 ஐ அடித்து கொண்டு இருந்தார்கள் என்னை அடித்துவிடுவார்களோ என பயந்து நான் சற்று தள்ளி நின்று கொண்டு இருந்தேன். பின்னர் ஊர்காரர்கள் 108 ஆம்புலசிற்கு தகவல் தெரிவித்து அ.சா.1 ஐ ஆம்புலன்சில் ஏற்றினார்கள். வழக்கு தொடர்ந்த போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான்.

அ.சா.1க்கும் 1 வது எதிரிக்கும் 04.11.2017 ம் ஆண்டு இரவு 9.00 மணியளவில் திருமணம் நடைபெற்றது.

மேற்கண்ட திருமணம் போலிசார் மிரட்டியதால்தான் நடந்தது என்றால் சரியல்ல.

பொதுவாக இந்துக்கள் வழக்கப்படி திருமணம் காலை நேரத்தில்தான் நடைபெறும் என்றால் சரிதான்.

அ.சா.1ம் எதிரி 1ம் எந்த காலத்திலும் காதலிக்கவில்லை என்றாலும், எதிரியை மிரட்டி திருமணம் செய்ய முயற்சித்து காவல் நிலையத்தின் மூலமாக மிரட்டப்பட்டு ஒரு பொய்யான திருமணத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை எதிரி 1–வீட்டில் நடைபெற்றது.

அ.சா.1 குடும்பத்தார்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு எதிரியின் வீட்டிற்கு அத்துமீறி நுழைந்து எதிரியை தாக்கினார்கள் என்றால் சரியல்ல.

அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட திருமணம் செல்லாது என்று எதிரி 1

அரூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பிறகுதான் மேற்சொன்ன நடைபெற்றது என்றால் சரியல்ல.

அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட திருமணம் செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவது பற்றி எனக்கு தெரியாது.

நான் சொல்வது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் ஏதும் பெறவில்லை என்றால் சரியல்ல.

வாக்குமூலம் என்னிடம் சம்பவம் நடைபெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் பெற்றார்கள்.

நான் தற்சமயம் நீதிமன்றத்தில் கூறியதைதான் போலிசார் விசாரணையிலும் கூறினேன்.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி**

**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 155 /2018

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :கவிதா |
| Father's Name/Husband Name | :ஆறுமுகம் |
| Village | :தாளநத்தம் |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW4 |
| Religion | : Hindu |
| Age | :47 |

**Solemnly affirmed in accordance wit7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை.**

நான் தற்போது தாளநத்ததில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா மகள் ஆவார். எதிரிகளை தெரியும்.

கடந்த 2017 ம் ஆண்டு அ.சா.1ம் 1 வது எதிரியும் காதலித்தார்கள் ஆனால் அவர்களுக்குள் என்ன தகராறு என்று தெரியவில்லை. 1வது எதிரி அ.சா.1 ஐ திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டார்.

பின்னர் அ.சா.1 – 1வது எதிரி மீது கடத்துர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதற்கு 2வது எதிரி பிரபாகரன் 1 வது எதிரியிடம் பேசி முடிவு செய்துவிட்டு முடிவு எடுப்பதாக கூறினார். ஆனால் எதிரிகள் அ.சா.1 ஐ திருமணம் செய்து கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் சம்பவம் குறித்து பெண் வீட்டார் அரூர் அணைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அங்கு இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்தர்கள் விசாரணைக்கு பிறகு அரூரில் உள்ள முருகன் கோவிலில் 1வது

எதிரி அ.சா.1 ஐ திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்கு பிறகு அ.சா.1 ஐ அவரது அ.சா.1ன் பெற்றோர் வீட்டிலேயே இருக்கும்படி கூறிவிட்டு சென்று விட்டார்கள். மீண்டும் அ.சா.1 ஐ எதிரிகள் அழைத்து செல்லவில்லை.

பின்னர் ஒரு மாதம் கழித்து 1 வது எதிரிக்கு 2வது திருமணம் செய்து வைப்பதாக கேள்விப்பட்டு அ.சா.1 – 1 வது எதிரியின் வீட்டுக்கு சென்றார். அப்போது 1வது எதிரியின் அம்மா, எதிரியின் சகோதரிகள் அடித்து விட்டதாக கேள்விபட்டு 1 வது எதிரியின் வீட்டிற்கு சென்றபோது அடிப்பட்ட அ.சா.1 ஐ ஆம்புலன்சில் ஏற்றிகொண்டு இருந்தார்கள். சம்பவம் குறித்து வழக்கு தொடர்ந்தபோலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

அரூர் முருகன் கோவிலில் வைத்து அ.சா.1 ஐ 1 வது எதிரி திருமணம் செய்ததை நான் நேரடியாக பார்த்தேன். ஆனால் தேதி ஞாபகமில்லை. நேரம் காலை 10.00 மணி இருக்கும்.

மேற்கண்ட திருமணம் போலிசார் எதிரி 1ஐ மிரட்டியதால்தான் நடைபெற்றது என்றால் சரிதான்.

திருமணம் இரவு 8.00 மணியளவில் நடைபெற்றது என்றால் சரிதான். நான் 10.00 என்று தவறாக குறிப்பிட்டேன் என்றாலும் சரிதான்.

பொதுவாக இந்துக்கள் வழக்கம்படி திருமணம் காலை நேரங்களில்தான் நடைபெறும் என்றால் சரிதான்.

அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட திருமணம் கட்டாயபடுத்தி மிரட்டி ஏற்படுத்தப்பட்ட திருமணம் என்றாலும், அது சம்பந்தமாக பாப்பிரெட்டிப்பட்டி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று கொண்டு வருகிறது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

புகார்தாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் என்னிடம் விசார்த்து வாக்குமூலம் ஏதும் பெறவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.

நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி

**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 30 /2023

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :பெருமாள் |
| Father's Name/Husband Name | :கருப்பன்னன் |
| Village | :சேலம் |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW23 |
| Religion | : Hindu |
| Age | :72 |

**Solemnly affirmed in accordance wit7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025**

எதிரிகள் ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை.**

நான் கடந்த 29.09.2012 ம் தேதி தருமபுரி மாவட்ட நில ஆக்கிரமிப்பு தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணிஒய்வு பெற்று தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன்.

கடந்த 2011 ம் வருடம் நான் தருமபுரி மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் பணியில் இருந்தபோது மனு ரசீது எண்.436/2011 ஐ விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முகாந்திரம் இருந்தபடியால் 12.11.2011 ம் தேதி சட்டபிரிவுகள் 447,294(பி)379,506(2) இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 23 ஆக குறியீடு செய்யப்படுகிது.**

பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் சம்பவயிடமான நடுப்பட்டி கிராமம் சர்வவே எண்.12/13 வாதி சுப்பிரமணிக்க சொந்தமான சம்பவயிடத்தை பார்வையிட்டு

சாட்சிகள் வீரமணி, கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகள் சுப்பிரமணி, திருப்பதி, கிருஷ்ணன், வெங்கடாசலம், வீரமணி, ஆகியோரை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் எதிரிகள் கோபால் த/பெ.அழகிரி மற்றும் தமிழ்செல்வன் த/பெ.கோபால் ஆகியோர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

மனு எண். 436/2011 ஐ பரிசீலனை செய்து சாட்சிகள் யாரையேனும் விசாரணை செய்தேனா என்றால் சுப்பிரமணி, திருப்பதி, கிருஷ்ணன், வீரமணி ஆகியோர்களை விசாரித்து 12.11.2011 ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

நான் புகாரை பெற்று அதில் முகாந்திரம் இருந்தபடியால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

நான் எந்த ஆவணங்களையும் பார்வையிடாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மனு எண்.436/2011 பெறப்பட்டவுடன் நான் 12.11.2011 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

நான் எதிரிகள் கோபால் மற்றும் தமிழ்செல்வன் ஆகியோர்களை 12.11.2011 ம் தேதி  கைது செய்தேன் நேரம் ஞாபகமில்லை.

முதல் தகவல் அறிக்கை 12.11.2011 காலை 8.15 மணியளவில் பதிவு செய்தேன்.

நான் முதல் தகவல் அறிக்கை காலை 8.15 மணிக்கு பதிவு செய்துவிட்டு தருமபுரியில் இருந்து நடுப்பட்டிக்கு அன்றே காலை 11.00 மணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

சொன்ன தேதி சொன்ன இடத்தில் சொல்லிய விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சம்பவயிடம் செல்லாமல் சம்பயிடத்தில்

சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்திலேயே சாட்சிகளையும் ஆவணங்களையும் தயார் செய்து எதிரியின் மீது ஒரு தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி**

**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 30 /2023

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :மாது |
| Father's Name/Husband Name | :சின்னதம்பி |
| Village | :தருமபுரி |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW22 |
| Religion | : Hindu |
| Age | :71 |

**Solemnly affirmed in accordance wit7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025**

எதிரிகள் ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை.**

நான் கடந்த 31.05.2011 ம் தேதி அதியமான் கோட்டை காவல் நிலையயத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது தருமபுரியில் வசித்து வருகிறேன்.

கடந்த 2011 ம் வருடம் நான் தருமபுரி மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன் பணியில் இருந்தபோது 08.08.2011 ம் தேதி தருமபுரி மாவட்ட காவல் கண்காணப்பாளர் அவர்களிடமிருந்து தபால் மூலம் வரப்பெற்ற பரசுராமன் மகன் சுப்பிரமணி என்பவரின் புகார் மனுவின் பேரில் மனு ரசீது எண்.436/2011 ஆக பதிவு செய்தேன். விசாரனைக்கு வேண்டி மனுவை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் வழங்கிய மனு ரசீது எண் 436/2011 என்றால் சரிதான் ஆனால் இவ்வழக்கில் நான் யாரையும் விசாரணை செய்யவில்லை.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி**

**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 79 /2019

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :வேலாயுதம் |
| Father's Name/Husband Name | :தங்கராஜ் |
| Village | :பையர்நத்தம் |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW4 |
| Religion | : Hindu |
| Age | :52 |

**Solemnly affirmed in accordance wit7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

விபத்து நடந்த தேதி 02.05.2019 ஆகும்.

விபத்து எனக்கு கேள்விபட்டுதான் தெரியும்.

இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் சரிதான்.

பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளவாறு கிழக்கு மேற்கு மற்றும் தெற்கு புறங்களில் என்ன இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

நான் சம்பவயிடத்தில் வைத்துதான் பார்வை மகஜரில் கையொப்பம் இட்டேன்.

எழுதப்படாத வெற்று காகிதத்தில் நான் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல.

அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி**

அரசுதரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

மறு விசாரணை இல்லை

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.

நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி